அ3/5009/2021

013101

**சுருக்கம்**

பழங்குடியினர் மேம்பாடு – 2021 – 2022 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியின மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதாரத் திறன் பயிற்சி மூலம் சான்று பெற்றவர்களுக்கு சுயமாக தொழில் துவங்க ஒரு நபருக்கு ரூ.50,000 வீதம் 100 நபர்களுக்கு ரூ.50 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2))துறை**

அரசாணை(ப) எண். 148 நாள் 20.10.2021
ஐப்பசி 03, பிலவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2052

DIRECTORATE OF TRIBAL WELFARE
22 OCT 2021
CHEPAUK, CHENNAI

படிக்கப்பட்டது:-

பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். அ3/5009/2021, நாள் 16.09.2021.

-----

**ஆணை:-**

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

> "பாரம்பரிய, சமூக சுகாதார திறன் பெற்ற 100 பழங்குடியின நபர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு 2 மாத களப்பயிற்சியோடு 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். சான்றிதழ் பெறுபவர்கள் சுயமாக தொழில் துவங்க ஏதுவாக உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட உதவிடும் வகையில் 100 பழங்குடியின பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.50 இலட்சம் செலவில் மானியமாக வழங்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், அனைத்து மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய, சமூக, சுகாதார திறன் கொண்ட 100 பழங்குடியின நபர்களை தேர்வு செய்து, University of Trans disciplinary Health & Science & Technology, Bangalore மூலமாக 2 மாத களப்பயிற்சியோடு 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும்

013101



இப்பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால் இப்பயிற்சி பெற்ற பழங்குடியினர் சுயமாக தொழில் துவங்குவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும், மேலும், University of Trans disciplinary Health & Science & Technology, Bangalore மூலம் சான்றிதழ் பெற்ற 100 பழங்குடியின மக்கள் சமுதாயத்தில் சுயமாக தொழில் செய்து முன்னேற்றம் அடையும் வகையில் பாரம்பரிய பழங்குடியின நடைமுறைகள் பின்பற்றி தொழில் துவங்க களிம்பு, மாத்திரை செய்யும் பொடிகள், கசாயம், லேகியம், மருத்துவ எண்ணெய், நெய் மற்றும் தேன் கலந்த மருந்துகள் இவற்றை பாரம்பரிய முறையில் மருந்துகள்ளை தயாரிக்கவும், தயாரிக்கப்பட்ட மருந்துகளை சேமித்து வைப்பது மிகவும் அவசியமாகிறது எனவும், எனவே, University of Trans disciplinary Health & Science & Technology, Bangalore மூலம் சான்றிதழ் பெற்ற 100 பழங்குடியின நபர்களை தேர்வு செய்து, சுயமாக தொழில் துவங்க ஒரு முறை மானியமாக (One Time Grant) தலா ரூ.50,000/- வீதம் 100 பழங்குடியின பயனாளிகளுக்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) தொகையினை 2021-2022 ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வருவாய் இனத்தில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து அரசாணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்ததன் அடிப்படையில், 2021 – 2022 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியின மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களிலுள்ள பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதாரத் திறன் பயிற்சி மூலம் சான்று பெற்றவர்களுக்கு சுயமாக தொழில் துவங்க ஒரு நபருக்கு ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வீதம் 100 நபர்களுக்கு ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02- பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் JY- விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை (IFHRMS DPC: 2225-02-796-JY-30901)"

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று சம்பந்தப்பட்ட அலுவலருக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.45629/நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)/2021, நாள் 18.10.2021-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்

அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினர் நல அலுவலர்கள்.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018/600 035.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 008.

நகல்

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின்

சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

முதன்மை செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-600 009.

நிதி (ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்

(ஆதிந5/அநமு1)துறை, சென்னை-600 009.

இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/10/2021

பிரிவு அலுவலர்